இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 07-06-2025

# ஜாதிவாரிக் கணக்கெடுப்பில் வஞ்சகம்

சாதி வாரிக் கணக்கெடுப்புடன் கூடிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை 2027 ஆம் ஆண்டுக்குத் தள்ளிப் போட்டுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதில் இவர்களது வஞ்சக எண்ணம் வெளிப்பட்டுள்ளது.

**பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு விவகாரத்தில் எந்த வஞ்சகத்தைச் செய்தார்களோ அதே வஞ்சகம்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பிலும் நடந்திருக்கிறது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்தபிறகு, தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு என்று நிபந்தனை விதித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இவை இரண்டும் முடிய இன்னும் பத்தாண்டுகள் ஆகும் என்பதை அனைவரும் அறிவோம். 'பெண்களுக்கு உரிமை தரக் கூடாது' என்று நினைக்கும் கட்சிதான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அதனால்தான் முடிந்தவரையில் அதனைத் தள்ளி விட்டார்கள். அதே வஞ்சகத்தைத்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு விவகாரத்திலும் செய்யப் பார்க்கிறார்கள்.**

சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுப்போம் என்பது உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செய்யப்பட்ட அறிவிப்பாக இருக்குமானால் அதனை உடனடியாகச் செய்வதற்கு என்ன குறைச்சல்? எதற்காகத் தள்ளிப் போட வேண்டும்? 2027 ஆம் ஆண்டுக்கு எதற்காகத் தள்ளிப் போட வேண்டும்?

மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் சாதிவாரிக் கணக்கெடுப்புடன் இரண்டு கட்டமாக நடத்தப்படும் என்று ஒன்றிய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. முதல் கட்டமாக, லடாக் உள்ளிட்ட பனிப் பகுதிகளில் 2026 அக்டோபர் 1ஆம் தேதியும், நாட்டின் பிற பகுதிகளில் 2027 மார்ச் 1ஆம் தேதியும் தொடங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். 2011 ஆம் ஆண்டில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் பிறகு 2021 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும். 2019 ஆம் ஆண்டு இதற்கான பணிகள் தொடங்கின. ஆனால் கொரோனா தொற்றுப் பரவல் ஏற்பட்டதால் அந்தப் பணிகள் ஒத்தி வைக்கப்பட்டன. கொரோனா நோய் பரவல் 2022 ஆம் ஆண்டு முற்றுப் பெற்ற நிலையில் அப்போதே பணிகளைத் தொடங்கி இருக்க வேண்டும். ஆனால் அதனைச் செய்யவில்லை. ஏனென்றால், 'மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பும் எடுக்க வேண்டும்' என்று கோரிக்கைகள் வலுப்பெற்றன. எனவேதான் மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும் ஒத்தி வைத்துக் கொண்டே இருந்தது பா.ஜ.க. அரசு.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் 'சாதி வாரிக் கணக்கெடுப்பு நடத்துவோம்' என்று 'இந்தியா' கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினார்கள். இந்தக் கோரிக்கைக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு கிடைத்தது. இது பா.ஜ.க.வுக்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது.

**கடந்த ஏப்ரல் 30 ஆம் தேதி பிரதமர் மோடி தலைமையில் ஒன்றிய அமைச்சரவை கூடியது. அதில், "அடுத்த மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சேர்த்து சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது. இப்போது ஏன் இந்த அவசரமான அறிவிப்பைச் செய்தார்கள்? அதற்கு ஒருவாரத்துக்கு முன்புதான் பகல்காம் தாக்குதல் நடந்துள்ளது. நாடு கொந்தளிப்பான சூழலில் இருந்தது. 'ஒன்றிய அரசின் பாதுகாப்புக் குறைபாடு' என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதனைத் திசை திருப்புவதற்காகவும், பீகார் மாநிலத்தில் சட்டசபைத் தேர்தல் வர இருப்பதாலும் அவசரமாக இந்த அறிவிப்பைச் செய்தார் பிரதமர் மோடி.**

"சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி மக்கள் தொகை அடிப்படையில் சமூகங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரசுக் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரசுக் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதிகளை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?" என்று கேட்டவர் தான் பிரதமர் மோடி. அப்படிப்பட்டவர் மனம் மாறினார். பீகார் தேர்தல் அவரை மனம்மாற வைத்தது. அதிலாவது அவர் உண்மையாக இருந்திருக்க வேண்டும்.

**அடுத்த ஆண்டு முதல் சாதிவாரிக் கணக்கெடுப்புடன் கூடிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அவர் தொடங்குவதாக அறிவித்திருக்க வேண்டும். மாறாக இரண்டு ஆண்டு காலத்துக்கு தள்ளிப் போட்டுள்ளது, அவர்களுக்கு உண்மையில் இதனை நடத்துவதற்கு விருப்பமில்லை என்பதையே காட்டுகிறது.**

1931ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சியில் சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டது. எனவே தற்போது நம்மிடம் இருக்கும் சாதிவாரித் தரவுகள் 1931 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டவை. நம்மிடம் இருக்கும் தரவுகள் 1931 தரவுகள் ஆகும். மக்கள் தொகைக் கணக்கெடுப்பானது 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. நம்மிடம் உள்ள தரவுகள் 2011 உள்ள தரவுகள்தான். எனவேதான் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வேண்டும் என்பது இன்றைய காலக் கட்டாயம் ஆகும்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த இவர்களுக்கு மனமில்லை என்பது நிதிநிலை அறிக்கை தாக்கல் ஆனபோதே தெரிந்துவிட்டது. ஏனென்றால் இதற்கான நிதியை முழுமையாக அப்போதே அவர்கள் ஒதுக்கீடு செய்யவில்லை.

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்துவதற்கு 13 ஆயிரம் கோடி ரூபாய் மொத்தம் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் 2025-26 நிதிநிலை அறிக்கையில் 574 கோடி ரூபாயை மட்டுமே ஒதுக்கீடு செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இவர்களது வஞ்சக எண்ணத்தை அந்த நிதி நிலை அறிக்கையே காட்டிக் கொடுத்து விட்டது. எனவே 2027 என்று இவர்கள் இப்போது சொல்வது அதிர்ச்சி அளிக்கவில்லை.**

எல்லாவற்றையும் அறிவிப்புடன் தலைப்புச் செய்தி ஆக்கினால் போதும் என்று மட்டுமே நினைக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

சாதிவாரிக் கணக்கெடுப்புடன் கூடிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும். அதன்பிறகு செய்யப்படும் தொகுதி மறுசீரமைப்பானது முறையானதாக அமைய வேண்டும். அதிலும் வஞ்சகம் வாழ்ந்துவிடாமல் தடுத்தாக வேண்டும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், சென்னை மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.இரவிச்சந்திரன் இல்லத்திருமண விழாவில், மணமக்கள் தரணிராஜ் – பொன்னரசி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், கழக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, பக்ரீத் பண்டிகையையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.6.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி. வில்சன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### குறுகிய காலக் கடனுக்கான

## வட்டி விகிதம் 0.5 சதவீதம் குறைப்பு!

### ரிசர்வ் வங்கி தகவல்!

*புதுடெல்லி, ஜூன் 7 -*

*ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ரெப்போ வட்டி எனப்படும் வங்கிகளின் குறுகியகால கடனுக்கான வட்டி விகிதம் 0.5% குறைக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.*

*குறுகியகால கடனுக்கான வட்டி விகிதம் 0.5% குறைக்கப்பட்டதை தொடர்ந்து, ரெப்போ வட்டி விகிதம் 6%லிருந்து 5.5%ஆக குறைந்துள்ளது ஏற்கனவே 2 முறை குறுகியகால கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்ட நிலையில், தற்போது 3வது முறையாக குறைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி, ஏப்ரல், ஜூன் ஆகிய மாதங்களைச் சேர்த்து 1 சதவீதம் ரெப்போ வட்டி விகிதம் குறைக்கப்பட்டிருந்தது. ரிசர்வ் வங்கியின் அறிவிப்பால் வீடு, வாகன கடன்களுக்கான வட்டி விகிதம் குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்திய பொருளாதாரத்தின் அடிப்படை வலுவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய பொருளாதார வளர்ச்சி விகிதம் நடப்பாண்டில் 6 புள்ளி 5 சதவீதமாக இருக்கும் என, ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்கோத்ரா கூறியுள்ளார்.*

### உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் – பிற்படுத்தப்பட்டோர் ஆணைய முன்னாள் தலைவர் – மறைந்த

## எம்.எஸ்.ஜனார்த்தனத்துக்கு - காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூன் 7-**

**சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசரும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் தலைவருமான எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்கள்.**

இது தொடர்பாக முதல்வரின் அறிவிப்பு வருமாறு :-

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முன்னாள் தலைவருமான நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் (வயது 89) உடல்நலக் குறைவால் இன்று (06.06.2025) இயற்கை எய்தினார்.

நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள், 1988 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வரலாற்றுச் சிறப்பு மிக்க பல தீர்ப்புகளை வழங்கியவர். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் தலைவராக 2006ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இவர், 2015 ஆம் ஆண்டு வரை அப்பொறுப்பில் நீடித்தார்.

இவரது பரிந்துரையின் அடிப்படையில்தான் தமிழகத்தில் இஸ்லாமியர்கள் இட ஒதுக்கீடு, கிறித்தவர்கள் இட ஒதுக்கீடு, அருந்ததியர் இட ஒதுக்கீடு ஆகியவை நடைமுறைப்படுத்தப் பட்டன. சமூகநீதி வரலாற்றில் தமது முத்திரையை மிகவும் ஆழமாகப் பதித்தவர் இவர். நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களின் மறைவு சமூக நீதித்துறைக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பு ஆகும்.

அன்னார் நீதித் துறைக்கும், மாநிலத்திற்கும் ஆற்றிய சேவையைப் போற்றும் வகையில் அவரது இறுதி நிகழ்வு காவல் துறை மரியாதையுடன் நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் தூய்மை இயக்கத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள தூய்மை தமிழ்நாடு நிறுவனத்தின் சார்பில் நேற்று முன்தினம் (5.6.2025), பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களில், அரசு அலுவலகங்களில் பல்வேறு வகையான குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்காக தனித்தனியாக சேகரிக்கும் பணி குறித்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் பெருநகர மேயர் திருமதி.ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.